بسم الله الرحمن الرحيم



**HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH
MUNIR AHMAD AZIM**

# FRIDAY SERMON

05 JULY 2019

(02 DHUL-QADDAH 1440 A H )

## EID PARTY?

## ஈது விருந்து

**TAMIL VERSION / தமிழ் பதிப்பு**

சலாத்திற்கு பிறகு தஷஹ்ஹுத், தஅவசு மற்றும் அல்.ஃ.பாத்திஹாவை ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் ஜுமா பேருரையியை ஆரம்பித்தார்.

பரிசுத்த ரமலான் மாதத்திற்கு பிறகும் முஸ்லீம் சமூதாயம் ஈது விருந்துகள் ஏற்பாடுசெய்து வருவதை பார்க்கும் பொழுது வெட்கக்கேடாக இருக்கிறது. இந்த அருளுக்குரிய மாதத்திற்குப் பிறகு ஷவ்வால் மாதம் வருகை தந்துள்ளது. ஈதுல் பித்தர் என்பது ஷவ்வால் மாதத்தின் முதல் நாளிலாகும். ஈது திருநாளானது முஸ்லீம் சமூகத்தைச் சார்ந்த அனைத்து நம்பிக்கையாளர்களுக்கும் மகிழ்ச்சியடைவதற்கான நாளாகிறது. இந்நாளில்

புசித்து, அருந்தி மகிழ்ச்சியடைவதற்கு அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்கு அனுமதியளித்திருக்கின்றான், மேலும் இந்த மகிழ்ச்சியை குடும்பத்தினருடனும் முஸ்லீம் அல்லாத அயலவர்களுடனும் நண்பர்களுடனும் பகிர்ந்து கொள்ள வேண்டும் இத்திருநாளில் இனிப்புவகைகள் மற்றும் கேக்குகளை வினியோகித்துக் கொள்ளலாம் அதை போலவே பிரியாணியும் வழங்கிக் கொள்ளலாம்.

உண்மையில் ஈது கொண்டாட்டமானது, நம்பிக்கையாளர்கள் மகிழ்ச்சியடைவதற்காக அல்லாஹ்வால் வழங்கப்படும் ஒன்றாகிறது. அதாவது இது ஒருமாதகால தியாகங்களுக்கு பிறகு அல்லாஹ் வழங்கும் மகிழ்ச்சியின் நாளாகிறது. மட்டுமின்றி இத்திருநாளானது படைப்பாளனுக்கு கீழ்ப்படிந்து அல்லாஹ்வின் வழியில் மிக பெரிய தியாகங்கள் புரிந்தவர்களுக்கான நாளாகிறது. சுமார் 29 அல்லது 30 நாட்களின் காலக் கெடுவுக்கு பிறகு அதாவது அந்நாட்களில் நீங்கள் அல்லாஹ்வுக்கு கீழ்ப்படிந்தீர்கள், அதிகாலை முதல் சூரியன் மறையும் வரை நோன்பு நோற்பு நேரத்தில் தடைசெய்யப்பட்ட அனைத்து விஷயங்களிலிருந்தும் விலகியிருந்தீர்கள். எனக்கு கீழ்ப்படியுங்கள் என்ற அல்லாஹ் கட்டளைகளுக்கேற்ப நீங்கள் அவனுக்கு கீழ்படிந்து தியாகம் புரிந்தீர்கள் மேலும் அதிகநேரம் இபாதத் மற்றும் திக்கிரில் மூழ்கியிருந்தோம். திரு-குர் - ஆன் பாராயணம் செய்தோம், துவாவில் முழ்கியிருந்தோம், பர்ஸ் மற்றும் நபில் தொழுகைகளில் ஏற்பட்டிருந்தோம், தர்மங்கள் வழங்கினோம், கொஞ்சம் மட்டும் சாப்பிட்டு, மிக குறைவான நேரம் மட்டும் தூங்கி, மிக அதிக நேரமும் இறை வழிபாடுசெயல்களில் ஈடுபட்டிருந்தோம்.

ஆகவே ரமலானுக்கு பிறகு ஈது என்பது தனக்கு முழுமையாக கீழ்படிந்தவாறு செயல்பட்ட நம்பிக்கையாளர்களாகிய அடியார்களுக்கு மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்கு அல்லாஹ் வழங்கிய திருநாளாகிறது. இத்திருநாளானது புசித்து, அருந்தி மற்றும் கேக்குகளை வினியோகித்து மகிழ்ச்சியடைவதற்கான ஒரு நாள் மட்டுமல்ல இது குடும்பச் சச்சரவு மற்றும் கோபத்தை மறந்து கொள்வதற்கும் அத்துடன் சதகாத்துல் பித்ர் வழங்கி நம்மை சுத்தப்படுத்திக் கொள்ளவதற்குமான ஒரு வாய்புக்கூட ஆகிறது.

அபூ ஜய்பூபில் அன்ஸாரி (ரலி) அவர்கள் தெரிவிக்கின்றார்கள். அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்.

**ரமலான் மாதத்தில் நோன்பு நோற்கவும் அதை தொடர்ந்து ஷவ்வால் மாதத்தில் ஆறு நோன்பு நோற்கவும் செய்பவர் யார், அவர் வாழ்நாள் முழுவதும் நோன்பு நோற்பவரை போலாவார். (முஸ்லீம்).**

மற்றொரு நபிமொழியில் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியதாக காணலாம்.

**ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பது பத்து மாதங்கள் நோன்பு நோற்பது போலவும் ஷவ்வால் மாதத்தில் ஆறு நாட்கள் நோன்பு நோற்பது இரண்டு மாதங்கள் நோன்பு நோற்பது போலவும் ஆகும்.** (அஹமது, நஸாயி)

இந்த ஹதீஸ்களைக் குறித்து நாம் சிந்திக்கும் பொழுது, ஒரு நல்ல செயலுக்கு பத்து மடங்குக்கு அதிகமான கூலி அளிக்கப்படுகிறது என்று புரிந்துக் கொள்ளலாம். ரமலான் மாதத்தில் 30 நாட்கள் நோன்பு நோற்பதும் அத்துடன் ஷவ்வால் மாதத்தில் 6 நாட்கள் நோன்பு நோற்பதும் சேர்க்கும்போது 36 நாட்கள் ஆகிறது. அந்த 36 நாட்களை 10 - த்தை கொண்டு பெருக்கும்போது 360 நாட்கள் ஆகிறது. சந்திர நாள்காட்டியின் படி 360 நாட்கள் என்பது ஒரு வருடமாகிறது. ஆகவே 36 நாட்கள் நோன்பு நோற்பதன் மூலம் 1 வருடம் நோன்பு நோற்றதன் கூலியை நமக்கு பெற்றுக் கொள்ளலாம்.

ஆனால் உண்மையான நம்பிக்கையாளர்களைப் பொறுத்தவரை, ரமலான் மாதம் அவர்களைவிட்டு வெளியேறும்போது அவர்கள் சோகமடைகின்றனர். நம்பிக்கையில் பலவீனமாக இருப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் மகிழ்சியடைகின்றனர். ஏனெனில் ரமலான் அவர்களின் ஆசை மற்றும் மகிழ்சிக்கு தடையாகயிருந்தது. அவர்களைப் பொறுத்தவரை அந்நாட்கள் சிறை வாழ்கையை போன்றிருந்தது. இன்று பார்க்க வருத்தமாக இருக்கிறது குறிப்பாக மொரீஷியஸில் ஈது விருந்துகள் தூக்கி வீசப்படுகிறது.

ரமலான் மாதத்தில், ஒரு புதிய நடைமுறையை நாம் எங்கும் காண்கிறோம். அதாவது ஈதுல் பித்தருக்கு பின்னர் ஈது விருந்துகள்

நடத்தப்படுகின்றன. அருளுக்குரிய ரமலான் மாதம் அவர்களுக்கு கற்பித்த நற்செயல்களை கடைப்பிடித்து வாழ்வதற்கான முயற்ச்சிகளை அவர்கள் மேற்கொள்வதில்லை அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை பற்றி அவர்களில் பெரும்பாலோரும் சிந்திப்பதில்லை. பௌதீக மற்றும் ஆன்மீக அளவில் ரமலான் மாதம் அவர்களில் கொண்டு வந்த மாற்றத்தைக் குறித்து அவர்கள் சிந்திப்பதில்லை. ஈதுல் பித்தருக்கு பின்புள்ள ஆறு நாள் நோன்பு நோற்பைக் கூட அவர்களில் பலமக்களும் கவனிப்பதில்லை. (இப்போது நாம் துல்காத் மாதத்தில் நுழைந்திருக்கின்றோம்) ஆனால் நாம் இப்போது என்ன பார்க்கிறோம்? அவர்களில் பல மக்களும் இப்போது ஒவ்வொரு வாரமும் கொண்டாடுகின்றார்கள். எல்லா இடங்களிலும் ஈது விருந்துகள் நடத்தப்படுகின்றன. இது, அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலங்களில் கூட இல்லாத ஒரு நிகழ்வாக மாறியுள்ளது.

இப்போதும் ஏராளமான முஸ்லீம்கள் ஈது விருந்துகள் அமைத்து கொண்டாடுகின்றனர். இத்தகைய விருந்துகள் அமைத்து கொண்டாடுவதற்காகவே ஷவ்வால் மாதத்தை ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்று எண்ணி அவர்கள் செயல்பட்டு வருகின்றனர். பிற முஸ்லீம்கள் அதாவது அஹமதியா முஸ்லீம்கள் அல்லாதவர்கள் இத்தகைய கொண்டாட்டங்களில் ஈடுபட்டுவரும் போது, நாம் புரிந்து கொள்ளவேண்டியது என்னவென்றால், அவர்களைப் பெறுத்தவரை ஈசா நபி (அலை) அவர்கள் உயிருடன் இப்போதும் வானத்தில் இருக்கின்றார் என்பது அவர்களின் நம்பிக்கையாகும். அத்தகைய நம்பிக்கை காரணமாக அவர்கள் நேர்வழியை இழந்திருக்கின்றனர். மட்டுமல்ல அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறுதி தூதர் என்று நம்பிக்கை கொள்வதன் மூலம் இறைவெளிப்பாடு மற்றும் இறைத் தூதர்களின் வருகையின் வாசலை அவர்கள் அடைத்து விட்டனர். அல்லாஹ் பேசுவதை நிறுத்திவிட்டான் என்று அவர்கள் நம்பிக்கை கொள்கின்றனர். மேலும் பீர்மார்கள் மற்றும் இறை நல்லடியார்களின் பெயரில் வழிபாடுகள், உறூஸ் மற்றும் இறந்தவர்களுக்க 8 –லிருந்து 40 நாட்கள் வரை கத்தம் ஓதுதல், பெரிய அளவில் பிரியாணி சமைத்தல், பழங்கள் வழங்குதல், முல்லாக்களை அழைத்து வாசித்தல், உண்ணுதல், அருந்துதல் எல்லாவற்றிற்கும் மேலாக அதற்கு அவர்களுக்கு பணம் வழங்குதல் போன்ற பித்

அத்துகளை பின்பற்றி வருகின்றனர். இஸ்லாமிய போதனைகளிலிருந்து அவர்களுக்கு உகந்தவாறு வெட்டியெடுத்து வடிவமைத்த பல்வேறு பிற பித் அத்துகளையும் அவர்கள் பின்பற்றுவதுண்டு. உண்மையான இஸ்லாமிய போதனைகளை பின்பற்றுவதற்கு பதிலாக இத்தகைய புதுமைகள் அனைத்தையும் அவர்கள் நடைமுறையில் கொண்டு வருகின்றனர்.

மற்றொரு துரதிர்ஷ்ட வசமான விஷயம் என்னவென்றால், அஹமதிகளும் ஈது விருந்துகள் அமைத்து கொண்டாடுகின்றனர். பிற முஸ்லீம் மக்களைவிட அவர்கள் சிறந்தவர்கள் என்று எண்ணுகின்றனர். இஸ்லாத்தின் போதனைகளில் நுழைந்துவிட்ட அனைத்து வகையான தீமை மற்றும் புதுமைகளை அகற்ற மஸீஹ் மற்றும் மஹ்தியாக தோன்றிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) மீது நம்பிக்கை கொண்டதால் அவர்களுக்கு சொர்கத்தின் வாசல் திறந்திருக்கின்றது என்று அவர்கள் எண்ணுகின்றனர். இஸ்லாமிய போதனைகளை வெறித்தனமாக முல்லாக்கள் மிதித்து வந்த ஒரு காலகட்டத்தில்தான் அவர் தோன்றினர் என்பது உண்மைதான்.

ஆனால் இப்போது அஹ்மதிகளில் என்ன நிகழ்ந்து வருகிறது? இப்போது அவர்கள்தான் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளையும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நமக்கு கற்பித்த பாடங்களையும் மிதிக்கின்றார்கள். அவர் பிற முஸ்லீம்களை விட மோசமான நிலையை அடைந்துள்ளர். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமா அத்தின் கருவூலத்தில் (Treasury) ஏராளமான நிதி வருகிறது. கடின உழைப்பால் பலமக்களும் தியாகம் செய்து வரும் சந்தா மற்றும் பிற நன்கொடைகளை மேலிடத்தில் இருப்பவர்கள் வீணடிக்கிறார்கள். நீங்கள் நினைவில் கொள்ளுங்கள், இத்தகையை பணத்தை அல்லாஹ்வின் மார்க்க வேலைகளுக்காக மட்டுமே செலவிட வேண்டும்.

தீனுல் இஸ்லாம் என்பது எல்லாம் வல்ல அல்லாஹ் மானிடகுலத்திற்கு சாதகமாக வழங்கிய ஒன்றாகும். இது இவ்வுலக வாழ்கையிலும் மறுவுலக வாழ்கையிலும் முழுமையான வெற்றியை உறுதிப்படுத்தும் ஒரு வாழ்கை முறையாகும்.

அல்லாஹ்வின் இந்த அருட்களிலிருந்து யார் பின் வாங்குகின்றாரோ அவர் உண்மையில் எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் நன்றி கெட்டவராக இருக்கிறார். இத்தகைய மக்கள் அல்லாஹ்வின் வழியில் பணத்தை செலவழிப்பதற்கு பதிலாக பெரிய விருந்துகள் அமைத்து பணத்தை செலவு செய்கின்றனர். மிக பெரிய கூடாரங்கள் கட்டி பலவகையான உணவுவகைகள் மினரல் வாட்டர், ஜூஸ் மற்றும் வெவ்வேறு தரப்பட்ட குளிர்பானங்கள் மேலும் பழம் மற்றும் பலவகையான சிற்றுண்டிகளை தயாரித்து உயர்ந்த மனிதர்கள் என்று அழைக்கப்படுபவர்களை மகிழ வைப்பதற்காக பணத்தை வீணடிக்கின்றனர். அவர்கள் அரசியல்வாதிகள், மற்றும் அமைச்சர்களை அழைக்கின்றனர் அத்துடன் அவர்கள் உயர்ந்தவர்கள் என்று எண்ணும் அத்தகைய நபர்கள், அரசியல்வாதிகள். பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசாங்க உறுப்பினர்கள் ஆகியோருடன் நெருக்கமாக இருப்பார்கள்.

இத்தகைய கொண்டாட்டங்களில் எப்போதும் ஒரே முகங்கள் மட்டுமே காணப்படும். ஒரே குடும்பங்களை மட்டும் தேர்வு செய்து, அழைப்பார்கள். சாதாரண மக்கள் மற்றும் ஏழைகளைப் பெறுத்தவரையில் அவர்களுக்கு இத்தகைய நிகழ்ச்சிகளில் அழைப்பிருக்காது அவர்களில் சிலரை மட்டுமே உங்களுக்கு காணமுடியும். அவர்கள் சேவை செய்வதற்கும் அல்லது பாத்திரங்களைக் கழுவுவதற்கும் மட்டுமே! ஆனால் பெரிய மனிதர்களைப் பொறுத்தவரை அவர்கள் மணமகனைப் போன்று பரிமாற வேண்டிய மேஜைக்கு முன் உட்கார்ந்திருப்பார்கள். இது நம்மை எங்கு அழைத்துச் செல்கிறது? இந்த பாதையில் தானா ரமலான் நம்மை அழைத்துச்சென்றது? நிச்சயமாக அத்தகைய மக்கள் தங்கள் படைப்பாளனிடம் நன்றிகெட்டவர்களாக இருக்கின்றனர். அவர்கள் பாராட்டிற்குரியவர்களல்ல. அதாவது அத்தகைய நபர்களின் செயல்கள் ஒரு போதும் பாராட்டத்தக்கதல்ல. அதனால்தான் இவ்வகையான மக்களை தக்வா இல்லாதவர்கள் என்று கூறலாம். ஏனெனில் இவர்கள் தீனுல் இஸ்லாமின் உண்மையான மதிப்பை உணராதவர்கள் மேலும் அருளுக்குரிய இந்த மார்க்கத்தின் குறைபாடற்ற இறை கட்டளைகளை பின்பற்றாதவர்கள். அல்லாஹ்வின் பார்வையில் இவர்கள்தான் வெறுக்கத்தக்கவர்கள். அல்லாஹ்வின்

பார்வையில் ஒருவர் வெறுக்கத்தக்கவராகயிருக்கும் போது அவர் பாராட்டிற்குரியவர் என்று எவ்வாறு நமக்கு கூற முடியும்?

நாம் கபடமற்ற நிலையில் இருக்க வேண்டும். ஒரு முழுமையான உண்மையை நான் கூறுகிறேன். ஈது திருவிழா என்பது நோன்பைக் கடைப்பிடித்த நம்பிக்கையாளர்களுக்கானது. ஈது என்பது முஸ்லீம் சமுதாயத்தின் உள்படையான கொண்டாட்டமாகும். இது படைப்பாளனால் நம்பிக்கையாளர்களுக்காக கட்டளையிடப்பட்டுள்ள ஒன்றாகும். இந்நாளில் நாம் செவிசாய்க்க வேண்டிய உண்மையான செய்தி என்பது, நமது படைப்பாளனின் செய்தி மற்றும் நமது அன்புகுரிய தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் போதனைகளாகும்.

நமது ஈது திருநாளை அசுத்தப்படுத்துவதற்கு நாம் அரசியல் வாதிகளுக்கு வாய்ப்பளிக்க கூடாது. இத்தகைய கொண்டாட்டங்களின் வாய்பை அரசியல்வாதிகள் பயன்படுத்திக்கொண்டு தங்கள் அரசியல் எதிராளிகளை விமர்சிக்கின்றனர் மேலும் முட்டாள்தனமாக பேசுகின்றனர், அத்துடன் உங்கள் வாக்குகளை பெற அவர்கள் முஸ்லீம் சமுதாயத்திற்கு தவறான வாக்குறுதிகளை அளிக்கின்றனர். முற்றிலும் ஆன்மீகமான நமது கொண்டாட்டங்களை அவர்கள் தங்கள் அரசியல் அரங்காக மாற்றுகின்றனர். அந்த அரசியல்வாதிகள் தங்களை நசுக்கு மளவு பேசிகொண்டாலும் அதை முஸ்லீம்கள் கேட்டுக் கொண்டேயிருப்பார்கள்.

நமது மத விழாக்களான ஈதுல்பித்தர், ஈதுல் அத்ஹா மற்றும் சீறத்துல் நபி போன்றவற்றில் உரையாற்றுவதற்கான வாய்பை நாம் அரசியவாதிகளுக்கு வழங்க கூடாது. அதற்கு பார்வையாளர்களாக நாம் இருக்க கூடாது. ஏனெனில் இது நமது ஆன்மீக கூட்டங்களாகிறது. பிற மதங்களிலிருந்துள்ள எடுத்துக் காட்டுகளை பாருங்கள், அவர்கள் அரசியல்வாதிகளை அழைக்கும்போது, அவர்களுக்கு உரையாற்றுவதற்கான வாய்ப்பை அளிப்பதில்லை. மாறாக அவர்கள் அங்கு அமர்ந்து அந்த ஆன்மீக பிரசங்கங்களைக் கேட்கவேண்டும். இந்த அரசியல்வாதிகளிடம் உங்கள் அரசியல் உரைகளை அரசியல் கூட்டங்களுக்கு மட்டும் ஒதுக்கிவைக்கும் படி சொல்லும் தைரியம் நமக்கு

இருக்க வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, பிறமதங்களைப் போலவே பதவி மற்றும் தனிப்பட்ட லாபத்திற்கு தாகமாக இருப்பவர்களும் நம்மிடம் உள்ளனர், முஸ்லீம் சமூதாயத்திலும் அஹ்மதியா ஜமாஅத்திலும் இதேபோன்றவர்களை காணலாம். அரசாங்கத்தின் பார்வையில் ஒரு நல்ல மதிப்பு கிடைக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். தனிப்பட்ட முறையிலான லாபமும் இத்தகை நபர்கள் விரும்புகிறார்கள். சமுதாயத்தைச் சார்ந்த மற்றவர்களைவிட அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) மீது அதிக அன்பு வைத்திருப்பாதாக அவர் நடக்கின்றனர். தற்போதைய அரசாங்கத்தால் நசுக்கப்பட்ட ஒரு சமுதாயம் இருந்தால் அது நிச்சயமாக முஸ்லீம் சமுதாயம்தான். ஆனால் அதிலிருந்து எந்த பாடங்களையும் முஸ்லீம்கள் கற்கவில்லை.

இந்த நாட்டில் சினுபான்மையினரை அரசாங்கம் புறக்கணித்து வருகிறது. ஒரு சமுதாயத்திற்கு மட்டுமே சாதகமாக உள்ளது. ஆகவே இத்தகைய அரசியல்வாதிகள் ஈது போன்ற அருள் நிறைந்த நாளில் உரையாற்ற வருவதை நமக்கு எவ்வாறு பொறுத்துக் கொள்ள முடியும்? மேலும் ஈது விருந்துகளில் பங்கேற்று உரையாற்ற அவர்களுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றனர். நீங்கள் அவர்களுக்கு செவி சாய்க்க விரும்புகின்றீர்கள். உங்களைப் பொறுத்த வரையில் அவர்கள் கெட்ட அரசியல்வாதிகளுமல்ல, தவறான வாக்குறுதிகள் அளிப்பவர்களுமல்ல. றூஹில் குத்துசுமாக அல்லாஹ் தனது பிரதிநிதியை அனுப்பிய போது நீங்கள் புறந்திரும்பிக் கொண்டீர்கள். அல்லாஹ்வின் தூதரை நீங்கள் பகைவனாக எண்ணிக் கொண்டீர்கள். பொய்யன் என்று அழைத்தீர்கள். ஒரு பொய்யனான தீர்க்கதரிச் என்றும் கள்வனாகிய கலீ∴பத்துல்லாஹ் என்றும் நீங்கள் அழைத்தீர்கள். அன்னார் பெற்ற வெளிப்பாடுகளை பொய் வெளிப்பாடுகள் என்று பிராச்சாரம் செய்தீர்கள் ஆனால் மற்றவர்கள், அவர்கள் முட்டாள்தனமாக பேசினாலும், எந்த மரியாதையும் உதவியும் வழங்காமலிருந்தாலும் அவர்கள் கூறுவதை நீங்கள் கேட்பீர்கள். முற்றிலும் ஆன்மீகமான கொண்டாட்டங்களில், பிறரின் முதுகில் குத்துவதற்கும், தங்கள் சக ஊழியர்களின் மாமிசத்தை சாப்பிடுவதற்கும் அவர்கள் விரும்புகின்றனர்.

அனைத்து முஸ்லீம் சகோதர – சகோதரிகளிடம் நான் ஒரு வேண்டுகோள் விடுக்கின்றேன். ஈது விருந்துகள் போன்ற புதுமைகளின் வலையில் நீங்கள்

சிக்கிக் கொள்ளாதீர்கள். ஈது விருந்துகள் அமைத்து கொண்டாடும் முஸ்லீம் குழுக்கள் உள்ளன. அங்கு ஆண்களும் பெண்களும் அந்நியர்களுடன் சேர்ந்து கொண்டாடுகின்றனர். முஸ்லீம் பெண்கள் மசூதிக்குள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் பாடல், நடனம், காவாலி விருந்துகள் போன்ற பொழுதுபோக்குகளில் பெண்களுக்கு கலந்து கொள்ளவும், நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும் அனுமதிக்கப்படுகின்றது. மேலும் அங்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் எந்த வேறுபாடும் இல்லை.

**எனவே இறை கட்டளைகளுக்கு மாறான இது போன்று விருந்து வைப்பவர்களுக்கு நான் அறிவுறுத்துகிறேன், இதையெல்லாம் நிறுத்துங்கள் அல்லாஹ் முழுமைப்படுத்திய இந்த தீனுல் இஸ்லாமை கேலி செய்யாதீர்கள். சில உலக லாபங்களுக்காக நீங்கள் இறை போதனைகளுக்கு எதிராக முதுகைத் திருப்பிக் கொள்ளாதீர்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்.**

அல்லாஹ்வின் திருப்தியை நம்மீது ஈர்க்க, நம் அவனது கட்டளைக்கு கீழ்படிந்து, நம்முடைய அன்புக்குரிய தூதரின் (ஸல்) அவர்களின் நடைமுறையை பின்பற்ற வேண்டும். எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்காக மக்கள் வாழத் தொடங்கும் போதுதான் இவை அனைத்திற்கும் தீர்வு காண முடியும். எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்காக வாழ்வது என்பது தெய்வீக கட்டளைகளின்படி வாழ்கையை அமைத்துகொள்வதுதான். எனவே இறை போதனைகளின் படி வாழ்கையை அமைத்து கொள்ளுங்கள் அவ்வாறேயானால் இது, மக்களை உண்மையான மனிதர்களாக மாற்றுகிறது. அது தக்வா - அல்லாஹ்வின் மீதான பயத்தை நமக்குள் குவித்துக் கொள்கிறது. இன்ஷா அல்லாஹ். ஆமீன்.

Translated by
Naib Amir *Azim Ahmad*
*7339689239*

## ISSUED BY

**SIRAJ DEEN SAHIB**
Amir Tamilnadu State, India
**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
Amir Kerala South Zone, India

PUBLISHED BY,
JAMAAT-UL-SAHIH-AL-ISLAM
KALIAKKAVILAI BRANCH
(TAMILNADU AND KERALA BORDER)
Ph No: 9789180817, 9171977109